PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

27.6.2023
ஊடக வெளியீடு 1:
PBA ஹோல்டிங்ஸ் பெர்ஹாட்(PBAHB)
23வது ஆண்டு பொதுக்கூட்டம்

**மேதகு சாவ் கொன் இயோவ்**
PBAHB மற்றும் PBAPP தலைவர்,
மற்றும் பினாங்கு மாநில முதலமைச்சர்

**PBA ஹோல்டிங்ஸ் பெர்ஹாட்: ரிம77.12 மில்லியன் வரிக்குப் பிறகு பெற்ற இலாபத்தில் 2022 நிதியாண்டில் ஒரு பங்கிற்கு 1.5 சென் இறுதி ஈவுத்தொகை அறிவிப்பு**

பினாங்கு, செவ்வாய், 27.6.2023: PBA ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் நிறுவனத்தின் 23வது ஆண்டு பொதுக் கூட்டத்தில் (PBA 5041) 31.12.2022 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கு **ஒரு பங்குக்கு 1.5 சென் என்ற ஈவுத்தொகை வழங்க** ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த ஈவுத்தொகைக்கான மொத்தம் ரிம4.96 மில்லியன், வருகின்ற 28.7.2023 அன்று அனைத்து பங்குதாரர்களுக்கும் வழங்கப்படும்.

அதாவது 2022ஆம் ஆண்டிற்கான PBAHBயின் ஈவுத்தொகை ஒரு பங்கிற்கு 3.0 சென் ஆகும். **PBAHB அதன் பங்குதாரர்களுக்கு ஈவுத்தொகையை வழங்கும் 2023 ஆம் ஆண்டானது தொடர்ச்சியாக 22 வருடங்களாக வழங்குவதை குறிக்கிறது** என்பதை நினைவில் கொள்ளவும். 2001 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித ஈவுத்தொகையையும் வழங்க நாங்கள் தவறியதில்லை.

<u>ரிம77.12 மில்லியன் வரி பங்களிப்புக்குப் பின்பு கிடைக்கப்பெற்ற இலாபம்</u>

2022 நிதியாண்டில், PBAHB ரிம77.12 மில்லியன் வரி பங்களிப்புக்குப் பின்பு கிடைக்கப்பெற்ற இலாபத்தைப் பதிவு செய்துள்ளது

**இருப்பினும், PBAHB இன் வரிக்கு முந்தைய இலாபம் (PBT) ரிம33.0 மில்லியன் மட்டுமே. 2022ஆம் ஆண்டில் வரிக்குப் பிந்தைய**

**இலாபத்தில் சுமார் ரிம49.0 மில்லியன், அங்கீகரிக்கப்படக்கூடிய அளவிற்கு பயன்படுத்தப்படாத மறுமுதலீட்டு கொடுப்பனவுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்களுக்குப் பயன்படுத்தப்படும்.**

PBAHB இன் முதன்மை துணை நிறுவனம் PBAPP ஆகும். இது பினாங்குக்கு சேவை செய்யும் உரிமம் பெற்ற நீர் விநியோக வாரியம் ஆகும். PBAPP 2022 இல் மலேசியாவில் மாதத்திற்கு முதல் 35,000 லிட்டருக்கு மிகக் குறைந்த உள்நாட்டு நீர் கட்டணத்தை வசூலித்துள்ளது என்பதை நினைவில் கொள்ளவும். PBAPP இன் மாதத்திற்கு முதல் 35,000 லிட்டருக்கான சராசரி உள்நாட்டு கட்டணமானது 1,000 லிட்டருக்கு 32 சென் மட்டுமே, இது 2020 இல் தேசிய சராசரியான 1,000 லிட்டருக்கு 77 சென் என்ற கட்டணத்தை விட 141% மலிவானது.

1,000 லிட்டருக்கு 32 சென் என்ற உள்நாட்டு கட்டணத்தைத் தக்கவைக்க, PBAPP 2022 இல் ரிம103.71 மில்லியன் உள்நாட்டு நீர் உதவித் தொகை அளிக்க வேண்டும்.

எனவே, PBAPP 2022 ஆம் ஆண்டில் மலேசியாவிலே மிகவும் திறன் மிக்க நீர் விநியோக வாரியத்தில் ஒன்றாக தன்னை நிரூபித்துள்ளது என்று கூறுவது நியாயமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இலாபத்தை ஈட்டும் நோக்கத்தில் மட்டுமே செயல்படாமல், 585,740 உள்நாட்டு நீர் பயனீட்டாளர்களின் நலனுக்காக உள்நாட்டு நீர் உதவித் தொகை வழங்குவதன் மூலம் பினாங்கிற்கு குறிப்பிடத்தக்க பெருநிறுவன சமூகப் பொறுப்பு உறுதிப்பாட்டை நிறைவேற்றுகிறது.

<u>1.1.2023 முதல்  "உள்நாட்டு அல்லாத பிரிவுகளுக்கு" அதிக கட்டணம்</u>

1.1.2023 அன்று, "நீர் சேவை தொழிலியல் (நீர் விநியோக சேவைகளுக்கானக் கட்டணம்) (பினாங்கு மாநிலம்) (திருத்தம்) விதிமுறைகள் 2022" என்ற  மத்திய அரசின் சட்டவிதிகளுக்கு இணங்க, பினாங்கில் உள்நாட்டு அல்லாத பிரிவுகளுக்குக் கூடுதலான

PBA Holdings Bhd
200001012513 (515119-U)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

கட்டணங்களை PBAPP செயல்படுத்தியது. இந்த விதிமுறையானது ஜூலை 2022 இல் முன்னாள் மத்திய அரசால் கூட்டாட்சி ஒழுங்குமுறையாக அமைக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, அரசிதழ் செய்யப்பட்டது.

**2023 இல் "உள்நாட்டு பயன்பாடு அற்ற பிரிவுகளுக்கு" அதிக கட்டணம் விதிப்பதன் மூலம் 2023 இல் PBAHB இன் வருவாயை அதிகரிக்கக்கூடும்.** இருப்பினும், PBAHB 2023 நிதியாண்டிற்கான "சாத்தியமான வருமான இலக்கு எண்ணை" 3 முக்கிய காரணங்களால் ஊகிக்க விரும்பவில்லை:

1. "உள்நாட்டு பயன்பாடு அற்ற" பிரிவுகளுக்கானக் கூடுதல் கட்டண விதிப்பு உள்நாட்டு அல்லாத நீர் பயன்பாடுகளை பாதிக்குமா என்பதை எங்களால் உறுதிப்படுத்த முடியாது. பினாங்கில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் 2023 இல் குறைந்த நீரை பயன்படுத்துவதன் மூலம், கட்டண மதிப்பாய்வின் தாக்கத்தைக் குறைக்க முடியும்.

2. 2022 ஆம் ஆண்டில், பினாங்கில் ஒரு நாளைக்கு சராசரியாக 868 மில்லியன் லிட்டர் நீர் பயன்பாட்டில்(MLD) 61.6% உள்நாட்டு நீர் பயன்பாடு ஆகும். தனிநபர் உள்நாட்டு பயன்பாடு நாள் ஒன்றுக்கு 307 லிட்டர் (LCD) ஆகும். 2023 முதல் காலாண்டில், பினாங்கில் நீர் பயன்பாடு 876 MLD ஆக அதிகரித்ததுள்ளது. PBAPP மதிப்பீடுகளின் அடிப்படையில், தனிநபர் உள்நாட்டு பயன்பாடு சுமார் 310 LCD ஆக உயர்ந்துள்ளது
   .உள்நாட்டு நீர் கட்டணங்கள் மதிப்பாய்வு செய்யப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவும். அதிகமான உள்நாட்டு நீர் பயன்பாடு நீடித்தால், 2023 நிதியாண்டில் PBAPP இன் உள்நாட்டு நீர் உதவித் தொகை ரிம103.71 மில்லியனைத் தாண்டும். அதிக உள்நாட்டு நீர் உதவித் தொகையினால், வரிக்குப் பிறகு எதிர்பார்க்கப்படும் இலாபத்தை விடக் குறைவாக இருக்கலாம்.

3. ஒரு பொது பட்டியலிடப்பட்ட நிறுவனமான PBAHB, வரிக்கு முந்தைய இலாபம் மற்றும் வரிக்குப் பிந்தைய இலாபம் உள்ளிட்ட நிதித் திட்டங்களில் புர்சா மலேசியாவால் அமைக்கப்பட்ட விதிமுறைகளுக்குக் கட்டுப்படும்.

எனவே, PBAHB அதிக வருவாயை ஈட்ட திட்டமிடுகிறது. இருப்பினும், நாங்கள் எந்த நிதி திட்டங்களையும் வழங்க மாட்டோம். **உண்மையான முடிவுகளை 2024 இல் மதிப்பாய்வு செய்வோம்.**

<u>கெடாவில் ஏற்பட்ட "சுங்கை மூடா சம்பவங்கள்" பினாங்கில் நீர் விநியோகத்தைப் பாதித்தது.</u>

ஜூலை 2022 இல், கெடாவில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் சுங்கை மூடாவில் உள்ள மூல நீரின் தரம் 3,000 NTU (nephelometric turbidity units) அளவை எட்டியது. சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் (WTP) செயல்பாடுகளை PBAPP மூட வேண்டியதாயிற்று, ஏனெனில் நீரின் தரம் 1,000 NTU-ஐ தாண்டினால் அதம் மூல நீரைப் பாதுகாப்பாகச் சுத்திகரிக்க முடியாது.

2023 மே மாதத்தில், கெடாவில் உள்ள தானியங்கி தடுப்பணையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அதன் தானியங்கி கதவுத் திறக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் சுங்கை மூடா நதியின் நீர்மட்டம் PBAPP-இன் லஹர் தியாங் இன்டேக்கில் 1.0 மீட்டருக்குக் கீழே குறைந்தது. இதனால் சுங்கை டுவா WTP-இல் சுத்திகரிப்புக்காக சுங்கை மூடாவிலிருந்து மூல நீரைப் பெறுவதற்கு PBAPP-க்கு தடை ஏற்பட்டது.

இரண்டு சம்பவங்களும் கெடாவில் நிகழ்ந்தது. இருப்பினும், இந்த இரண்டு சம்பவங்களால் பினாங்கில் சுமார் 450,000 நீர் பயனீட்டாளருக்கு நீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது.

பினாங்கு, சுங்கை மூடாவை பிரதான மூல நீர் ஆதாரமாகச் சார்ந்துள்ளது என்பது தெளிவாகிறது. மற்றொரு சுங்கை மூடா சம்பவத்தின்

அபாயங்களைக் குறைப்பதற்கான வகையில் பின்வரும் முக்கிய கூறுகளைக் கவனியுங்கள்:

- **பினாங்கிற்கான மூல நீர் வள மேம்பாடு மத்திய அரசின் பொறுப்பாகும்.** நீர் விநியோக சேவைகள் அனைத்தும் நீர் விநியோக தொழிலியல் சட்டம் 2006 (சட்டம் 655) மற்றும் SPAN சட்டம் 2006 (சட்டம் 654) ஆகியவற்றின் கீழ் மத்திய அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

- பினாங்கு மாநிலத்தில் உப்புநீக்கம், மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி ஆகியவற்றை செயல்படுத்த விருப்பம் உள்ளது, ஆனால் அதன் செலவு மிக அதிகமாக இருக்கும். சிங்கப்பூரில், பொதுப் பயன்பாட்டு வாரியம் (PUB) நீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த மூன்று தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துகிறது. சிங்கப்பூரில் முதல் 35,000 லிட்டர் உள்நாட்டு பயன்பாட்டுக்கான சராசரி கட்டணம் 1,000 லிட்டருக்கு SGD2.74 அல்லது ரிம9.42 ஆகும். பினாங்கில், 2023-இல் 1,000 லிட்டருக்கு 32 சென் மட்டுமே விதிக்கிறோம்.

பினாங்கு வாழ் மக்கள் நீர் விநியோகத்திற்கு 30 மடங்கு அதிக கட்டணம் செலுத்த தயாராக இருப்பதாக நாங்கள் நினைக்கவில்லை.

- **பினாங்கு மாநிலத்தில் உப்புநீக்கம், மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மறுசுழற்சி ஆகியவற்றைத் தொடர முடிவு செய்தாலும்**, அதன் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்கும், அதிக நீர் கட்டணங்களை செயல்படுத்துவதற்கும் மத்திய அரசின் ஒப்புதல் நமக்குத் தேவை.

பினாங்கு மாநில அரசும் PBAPPயும் ரிம1.2 பில்லியன் செலவில் மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டம் (MDEP) மற்றும் "பினாங்கு-பேராக் நீர்த் திட்டம்" ஆகியவற்றை நிறைவு செய்வதற்கு இவையே முக்கியக் காரணங்கள் ஆகும்.

MDEP மற்றும் "பினாங்கு-பேராக் நீர் திட்டம்"

MDEP திட்டம் முழுமையாக முடிவடைந்ததும், சுங்கை மூடாவில் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படும் போதெல்லாம் MDEP பினாங்கிற்கு "1,000 MLD back-up" நீராக வழங்க முடியும். 2011 இல் அறிவிக்கப்பட்டபடி, மத்திய அரசின் MDEP-ஐ நிறைவு செய்வதால் பினாங்குக்கு "எவ்வித செலவும் கிடையாது" ஏனெனில் இது ரிம1.2 பில்லியன் மத்திய அரசின் மானியத்தின் கீழ் கட்டப்பட வேண்டிய திட்டமாகும்.

'பினாங்கு-பேராக் நீர்த் திட்டம்' நிறைவேற்றப்பட்டால், 2050 ஆம் ஆண்டு வரை இரண்டாவது பெரிய மூல நீர் ஆதாரத்தை நாம் பெற்றிடுவோம். இது மாநில அரசு-அரசாங்கம் (G2G)இடையிலான முன்னெடுப்புத் திட்டமாகும்.

இந்த நேரத்தில், MDEP மற்றும் "பினாங்கு-பேராக் நீர் திட்டம்" ஆகியவற்றின் நிறைவு பினாங்கின் நீர் தேவைகள் மற்றும் அபாயங்களை நிவர்த்திச் செய்வதற்கான மிகவும் பகுத்தறிவு மற்றும் ஆக்கப்பூர்வமான திட்டங்களாகத் திகழ்கிறது.

நன்றி

எழுத்தாக்கம் :Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவு
மின்னஞ்சல் :syarifah@pba.com.my